**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.44/2020**

2025–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.07.2025 | தகப்பனார் பெயர்: | கோவிந்தசாமி |
| பெயர்: | பார்த்தசாரதி (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | புதுப்பட்டினம் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 60/2025 |

**முதல் விசாரணை : 24.07.2025**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபன பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 26.09.2019–ம் தேதியிட் 1, 2 பிரதிவாதிகளுக்கு எனது தரப்பில் வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.1**

2. 17.10.2019–ம் தேதியிட்ட 1, 2 ம் பிரதிவாதிகளின் பதில் அறிவிப்பின் அசல் **வா.சா.ஆ.2**

3. 01.08.2019–ம் தேதியிட்ட கிஸ்தி ரசீதின் அடிக்கட்டின் நகல் **வா.சா.ஆ.3**

4. 24.02.2020– ம் தேதியிட்ட பட்டா கணினி பதிவறக்க நகல் **வா.சா.ஆ.4**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.